


மொழிபோர் தியாகிகள் நினைவுநாளையொட்டி நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு தமிழர்நல இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

# நெல்லையில் ஆதித்தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்

நெல்லை, ஜன.25-

இடுக்கி மாவட்டத்தை தமிழ்நாட்டுடன் இணைக்க வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை சார்பில் நெல்லையில் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு ஆதித்தமிழர் பேரவை சங்கர் தலைமை வகித்தார். மாநகர செயலாளர் வேலாயுதம், மாவட்ட பொறுப்பாளர் இளமாறன், ஒன்றிய செயலாளர் முத்துவீரன், மாநகர நிதி செயலாளர் எழிலரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்ச்சான்றோர் பேரவை மாநகர தலைவர் சுதர்சன், பாரி பாவாணர் தமிழ் மன்றம் நல்லகண்ணு, பாமக கொள்கை விளக்க அணி மாநிலத் தலைவர் வியனரசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

தமிழ்மொழியை கல்வி மொழியாக்க வேண்டும். தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இடுக்கி மாவட்டத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழ்முரசு - மாலை 25-01-12

# ஆர்ப்பாட்டம்




கூடங்குளம் அணு உலையை மூட வேண்டும், தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழர் நல இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நெல்லை ரெயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பா.ம.க. கொள்கை விளக்க அணி தலைவர் அ.வியனரசு, ஆதிதமிழர் பேரவை சங்கர், தமிழ் சான்றோர் பேரவை சுதர்சன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.